A. Sehu Mohideen.
Sainthamaruthu

# பொது முன்னணி
## என்ற பெயரில்
## முஸ்லிம் காங்கிரஸை
## பூண்டோடு அழிக்க
## (சு)தந்திரக் கட்சி செய்த
# சதியின் கதையிது



## முஸ்லிம் சமூகத்தின்
## தனித்துவத்தை அழிக்க
## (சு)தந்திரக் கட்சி
# சதி செய்ததா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்

## அன்புள்ள முஸ்லிம் வாக்காளப் பெருமக்களே!

## அஸ்ஸலாமு அலைக்கும் (வ. வ.)

"சிறிமாவின் சேலைத் தலைப்பில் அஷ்ரஃப் தொங்கிக் கொள்ளப் போகிறார். சுதந்திரக் கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணையப் போகிறது; இணைந்து விட்டது. அமைச்சுப் பதவிக்காக சமூகத்தை அஷ்ரஃப் அடகு வைத்துவிட்டார்" என்றெல்லாம் ஒரு கட்டத்தில் அக்கறையுள்ள சக்திகள் முஸ்லிம் காங்கிரஸிற்கெதிராகப் பொய்ப் பிரச்சாரம் செய்தன.

சுதந்திரக் கட்சி உட்பட 6 எதிர்க்கட்சிக் கூட்டணியிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகிய போது, பிரேமதாஸாவின் அழைப்பின் பேரில் அவருடன் முஸ்லிம் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்திய போது அதே அக்கறையுள்ள சக்திகள் மீண்டும் வேறொரு பிரச்சாரத்தை எழுப்பிவிட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து விட்டது. அமைச்சுப் பதவிக்காக அஷ்ரஃப், பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தை நடாத்துகிறார். பிரேமதாஸாவிடம் லட்சக்கணக்கில் ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு சமூகத்தை விற்றுவிட்டார்" என்றெல்லாம் அதே அக்கறையுள்ள சக்திகள் இப்போது கதை கட்டியுள்ளன; புழுகுமூட்டைகளை அவிழ்த்து விட்டுள்ளன.

சிறிமாவுடனும், சுதந்திரக் கட்சியுடனும், முஸ்லிம் காங்கிரஸையும் அதன் தலைவர் அஸ்ரஃப் அவர்களையும் இணைத்துக் கதை கட்டுவதற்குக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் என்ன? இப்போது சுதந்திரக் கட்சியினர் எம்மைத் தூற்றிப் பேசுவது ஏன்? திரு. பிரேமதாஸாவுடன் முஸ்லிம் காங்கிரஸை இணைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத கட்டுவதற்குக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் எவை? அதே சக்திகள் இப்போதும் தமது பொய்ப் பிரச்சாரத்தை வேறு கோணத்தில் மேற்கொண்டுள்ளதன் காரணம் என்ன? முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவத்தையும், முஸ்லிம் மக்களின் அண்மைக்கால ஐக்கியத்தைக் குலைப்பதற்கும் இந்தப் பேரினவாதக் கட்சியும், அதன் அடிவருடிகளும், சந்தர்ப்பவாத வங்குரோத்து முஸ்லிம் அரசியல்வாதிகளும் சதி செய்தார்களா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு இந்தப் பிரசுரம் பதில் தரும்; விளக்கமளிக்கும் என முஸ்லிம் காங்கிரஸ் நம்புகிறது.

## முன்னணியின் பின்னணி:

சிறிமா அம்மையாரின் சுதந்திரக் கட்சி 8 எதிர்க் கட்சிகளுடன் இணைந்து ஒரு பொது வேலைத் திட்டத்தையும், எதிர்க்கட்சிகளின் ஒரு பொது முன்னணியையும் அமைக்கும் கடந்தகாலப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் காங்கிரஸ் சம்பந்தப் பட்டதன் பின்னணி இதுதான்.

நாட்டில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஆராய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பெப்ரவரி 19ஆம் திகதி எம். ஈ. பீ. அலுவலகத்திற்கு அழைக்கப் பட்டிருந்தன. இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரசும் பங்குபற்றியது. சுதந்திரக் கட்சி பங்குபற்றவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் பங்குபற்றவில்லை.

இதனைத் தொடர்ந்து அவ்வப்போது இந்த எதிர்க்கட்சிகள் நாட்டு அரசியல் நிலைமைகளை ஒன்று கூடி ஆராய்ந்து வந்தன. அந்தக் கூட்டங்களில் சுதந்திரக் கட்சிப் பிரதிநிதி ஒருவரும் பங்குபற்றி வந்தார்.

ஏப்ரல் 7ஆம் திகதி இந்த எதிர்க்கட்சிகளின் கூட்டு மே தின ஊர்வலம் ஒன்றிற்கும், கூட்டத்திற்கும் சுதந்திரக் கட்சி அழைப்பு விடுத்தது. ஏப்ரல் 16ஆம் திகதி இது தொடர்பாக நடைபெற்ற கூட்டமொன்றில் முஸ்லிம் காங்கிரஸ் இது சம்பந்தமான தனது நிலைப்பாட்டைப் பின்வருமாறு தெளிவு படுத்தியது.

"மே தின ஊர்வலம் என்பது முதலாளி - தொழிலாளி வர்க்கப் போராட்டமாகும். இஸ்லாத்தில் இந்த வர்க்க வேறுபாட்டிற்கு இடமில்லை. மேலும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் இந்த ஊர்வலத்திலும், கூட்டத்திலும் பங்குபற்றும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸிற்கு நீலச் சாயம் பூசப்படும். அத்துடன் முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவம் அழிக்கப்பட்டுவிடும்" என்று கூறி எதிர்ப்புத் தெரிவித்துப் பங்குபற்ற மறுத்து விட்டது. இது போலவே ருக்மன் சேனநாயக்காவின் ஈ எல். ஜே. பி.யும், தமிழ்க் காங்ரஸும் ஊர்வலத்தில் பங்குபற்ற மறுத்துவிட்டன.

இத்தகைய சந்திப்புகளின் போது, இந்தக் கட்சிகளின் அரசியல் நிலைப்பாடுகள் சிலவற்றில் உடன்பாடு காணப்படவே அத்தகைய பொதுவான உடன்பாடுகளின் அடிப்படையில் இந்தக் கட்சிகள் ஒன்றுபட்டுப் பலமிக்க எதிர்ச்சக்தியாக வரவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் விரும்பியது. இதற்கான காரணம் இது தான்.

## பொதுத் தேர்தல் :

முஸ்லிம் காங்கிரஸ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை எதிர்க்கிறது. நாடாளுமன்றத்திடமே சகல நிறைவேற்று அதிகாரங்களும் இருக்க வேண்டும் என்ற கொள்கையுடையது. சுதந்திரக் கட்சி உட்பட பல எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து பலமிக்க அரசியல் சக்தியாக மாறி இன்றைய அரசாங்கத்தைப் பொதுத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியது.

## ஜனாதிபதித் தேர்தல் :

ஜனாதிபதித் தேர்தலைப் பற்றி முஸ்லிம் காங்கிரஸ் அப்போது அலட்டிக் கொள்ளவில்லை. காரணம், ஜனாதிபதித் தேர்தல் மூலம் இந்த அரசாங்கத்தைத் தோற்கடிக்க முடியாது. ஜனாதிபதியை மட்டுமே மாற்றலாம் என்பதாலாகும்.

ஜூலை 6ஆம் திகதிக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்த மேற்படி கூட்டு எதிரணி அரசியல் உடன்பாட்டு யோசனை பின்னைய சந்திப்புகளிலும் ஆழமாக ஆராயப்பட்டு வந்தது. இதன்படி ஜூலை 28ஆம் திகதி இந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஓர் அரசியல் உடன்பாட்டிற்கு வரச் சம்மதித்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஊகங்கள் அதிகரித்து வந்தன. ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளின் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனையை ஈ. எல். ஜே. பி. முன்வைத்தது.

''இந்த அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாகவும், நேர்மையானதாகவும் இருக்காது என்பதால் எந்த ஒரு கட்சித் தலைவரையும் வேட்பாளராக நிறுத்தி எதிரணியினரின் சக்தியை வீணாக்காமல், அடையாளத்திற்காக - இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரைப் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்த வேண்டும்'' என்ற யோசனையை ஜே. வி. பி. முன்வைத்தது. இதற்குக் கட்சிகளிடையே உடன்பாடு காணப்பட்டது. ஏனெனில் எதிரணிக்கு ஜனாதிபதித் தேர்தலை விடப் பொதுத் தேர்தலே முக்கியமானதாக இருந்தது. காரணம் பொதுத் தேர்தல் ஒன்றின் மூலமே இந்த அரசாங்கத்தைத் தோற்கடிக்க முடியும்.

## ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா :

எனினும் சுதந்திரக் கட்சி இந்த முடிவுக்கு உடன்படவில்லை. காரணம் சுதந்திரக் கட்சி மத்திய குழு, தனது ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா பண்டாரநாயக்காவை ஏற்கனவே தெரிவு செய்திருந்தது. இதனால் அவர்களுக்கு இன்னொருவரை வேட்பாளராக நியமிப்பதற்கு உடன்பட முடியவில்லை, எனவே இந்த எதிர்க்கட்சிகளிடையேயும் ஜனாதிபதி வேட்பாளராக எதிரணி சார்பில் சிறிமாவை நிறுத்துவதில் உடன்பாடு காணப்பட்டது. ஆனால் சிறிமா எதிரணியின் பொது வேட்பாளராகப் போட்டியிடுமிடத்து எதிர்க்கட்சிக் கூட்டணியைத் தேர்தல் ஆணையாளரிடம் புதிய கட்சியாகப் பதிவு செய்து அந்தக் கட்சியின் சின்னத்தில் தான் சிறிமா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும். சுதந்திரக் கட்சியின் சார்பில் ''கைச் சின்னத்தின் கீழ்'' போட்டியிடக் கூடாது. 'கை'ச் சின்னத்தைக் கைவிட வேண்டும் என எதிர்க்கட்சிகள் நிபந்தனை விதித்தன. உடனடியாக இதற்கு உடன்பட மறுத்த சுதந்திரக் கட்சி தனது மத்திய குழுவின் பரிசீலனைக்கு இதனைச் சமர்ப்பித்து முடிவை அறிவிப்பதாகக் கூறியது. சிறிமா சுதந்திரக் கட்சி சார்பில் ''கை''ச் சின்னத்தில் போட்டியிட்டால் அவரை தம்மால் ஆதரிக்க முடியாது என்ற உறுதியான நிலைப்பாட்டை எடுத்த கட்சிகள் ஈ. எல். ஜே. பி. யும் முஸ்லிம் காங்கிரஸும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டம்பர் முதலாம் திகதியக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இந்த எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து, ஒரு பொது முன்னணியை உருவாக்க வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தது. சுதந்திரக் கட்சி உட்பட எட்டுக் கட்சிகளும் இதனை நன்கு பரிசீலனை செய்து ஏற்றுக் கொண்டன.

## 'கை' சின்னத்தில் அல்ல:

''கை'' சின்னத்தைக் கைவிட்டு பொது முன்னணியின் வேட்பாளராக, புதிய சின்னத்தின் கீழ் ஜனாதிபதித் தேர்தலில் சிறிமா போட்டியிடலாம் என்று சுதந்திரக் கட்சி மத்திய குழு முடிவு செய்தது. இந்த முடிவு செப்டெம்பர் 30ஆம் திகதிக் கூட்டத்தில் எதிரணிக்கு அறிவிக்கப் பட்டது. அன்றைய தினம் உத்தேச முன்னணியின் உத்தியோகபூர்வ பேச்சாளராக திரு. குமார் பொன்னம்பலம் நியமிக்கப்பட்டார். அன்றைய கூட்டத்தில் இந்தப் பொது முன்னணி ஜனாதிபதித் தேர்தலுக்கு மட்டுமா? அல்லது பொதுத் தேர்தலுக்குமா?'' என்ற கேள்வியை மீண்டும் முஸ்லிம் காங்கிரஸ் எழுப்பியது. ஏனெனில் ''இரு தேர்தலுக்குமான பொது முன்னணி'' என்று உடன்பட்ட போதும் சுதந்திரக் கட்சியின் நடவடிக்கைகள் இந்த முன்னணி, ஜனாதிபதித் தேர்தலுக்கு மட்டும் தான் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் கோடிட்டுக் காட்டுவதாயிருந்தன.

''இரு தேர்தல்களுக்குமே'' என எல்லாக் கட்சிகளுமே உறுதியளித்தன. ஆனால் சுதந்திரக் கட்சியால் அவ்வாறு உடன்பட முடியவில்லை. அது தொடர்பாக மீண்டும் மத்திய குழுவுடன் ஆலோசித்து முடிவு செய்து, தெளிவான நிலைப்பாட்டை அறிவிப்பதாக சுதந்திரக் கட்சி கூறியது. இதன்படி இரண்டாவது தடவையாகவும் சுதந்திரக் கட்சி தனது மத்திய குழுவிடம் செல்ல வேண்டி ஏற்பட்டது.

அதிர்ஷ்டவசமாக, ''இந்த முன்னணி ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகிய இரண்டுக்கும் தான்'' என்ற பதிலுடனும், வருத்தத்துடனும் சுதந்திரக் கட்சி திரும்பி வந்தது.

## முன்னணி அமைப்புக்கான அடிப்படை அம்சங்கள்:

★ சுதந்திரக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், ஜே. வி. பி, ஈ. எல். பி. ஜே., ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், லிபரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி, எம்.ஈ.பீ. ஆகிய எட்டுக் கட்சிகள் சேர்ந்தே இந்தப் பொது முன்னணி அமையும். பொது முன்னணி யின் யாப்பின் படி இந்த எட்டுக் கட்சிகளும் ஒரே பேசை யில் இணைந்து உட்காரக் கூடிய சம பங்காளிகள். இந்த முன்னணியை உருவாக்குவதால் முன்னணியிலுள்ள கட்சிகளின் தனித்துவம் அடையாளம் பாதிப்படையக் கூடாது.

★ புதியதொரு கட்சியை முன்னணியில் சேர்த்துக் கொள்வ தாயின் இந்த எட்டுக் கட்சிகளின் ஏகமனதான சம்மதத் துடனேயே சேர்க்க வேண்டும். எதிர்க் கட்சிகளுள் ஒன்று அதனை எதிர்த்தாலும் அந்தப் புதிய கட்சியைச் சேர்க்கக் கூடாது என்ற ரத்ததிகாரம் (Veto Power) கட்சிகளுக்கு இருக்க வேண்டும்.

★ இந்த எட்டுக் கட்சிகளில் ஒன்று முன்னணியிலிருந்து வில கினாலும், முன்னணி கலைய வேண்டும். பொதுத் தேர்த லின் பின் முன்னணி ஆட்சியிலிருக்கும் போது, அதிலி ருந்து ஒரு கட்சி விலகினாலும் நாடாளுமன்றம் கலைக்கப் பட வேண்டும்.

★ முன்னணிக் கட்சிகளிடையே முன்னணி ஆட்சி அமைக்கும் போது செயற்படக் கூடியதான அதிகாரப் பங்கீடு தெளி வாக முன்னதாகவே வரையறுக்கப்பட வேண்டும்.

மேற்படி அடிப்படை அம்சங்கள் முன்னணியை அமைக்கும் போது ஆலோசனைக்குச் சமர்ப்பித்து ஏகமனதாக ஏற்றுக்கொள் ளப்பட்டன.

இறுதி ஆலோசனைகள் இரண்டிலும் உடன்பாடு காண்பதில் சுதந்திரக் கட்சிக்குச் சங்கடம் ஏற்பட்டது. எனினும் அதிகா ரப் பங்கீடு, தொகுதிப் பங்கீடு முதலிய விடயங்களை முன்னணி அமைப்பு வேலைகளின் இறுதிக் கட்டத்தில் பேசி உடன்பட்டுக் கொள்ளலாம் என சுதந்திரக் கட்சி தெரிவித்து அதற்கு உடன் பாடு காணப்பட்டது.

## அதிகாரப் பங்கீடு இறுதிக் கட்டத்தில்:

அதிகாரப் பங்கீடு தொடர்பாக இறுதிக் கட்டத்தில் ஆரா யலாம், என சங்கடங்களுக்கு மத்தியில் உடன்பட்ட காரணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலோ என்னவோ, முன்னணி அமைப்பு வேலைகளின் இறுதிக் கட்டத்தை அடைவதில் வீண் தாமதம் ஏற்பட்டுக் கொண்டு வந்தது. இதற்கு சுதந்திரக் கட்சி காரணமாகவும் இருந்து வந்தது.

கூட்டங்களுக்கு சுதந்திரக் கட்சியின் சார்பில் வெவ்வேறு பிரதிநிதிகள் சமூகமளித்து வந்தனர். ஆனால் ஏனைய கட்சிகளைப் பொறுத்தவரை அதே கட்சித் தலைவர்களே தொடர்ந்து பங்கு பற்றி வந்தனர். சுதந்திரக் கட்சித் தலைமைத்துவம் நவம்பர் முதலாம் திகதி வரை கட்சித் தலைவர்களின் மேசைக்கு வரத் தவறியது. சுதந்திரக் கட்சித் தலைமைத்துவத்தின் பிரதிநிதியாக வந்தவர் பேச்சுவார்த்தைகளின் எந்த ஒரு விடயத்திலும் தற் துணிபுடன் முடிவெடுக்க முடியாதவராக இருந்தார்.

உத்தேச பொது முன்னணி தொடர்பான பேச்சுக்கள் இறுதிக் கட்டத்தை அடையாது தொடர்வது — தேர்தல் ஆணையாளரிடம் இந்த முன்னணியைப் பதிவு செய்வதை தாமதப்படுத்தும் என்ப தால் சுதந்திரக் கட்சியின் நல்லெண்ணம் நேர்மை என்பன பற்றி ஜே. வி. பி. இந்தக் கட்டத்தில் சந்தேகம் தெரிவித்தது.

## இறுதிக்கட்டத்தை அடைவதில் சுதந்திரக் கட்சி வீண் தாமதம்:

பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்திற்கு நெருங்குவதை சுதந்திரக் கட்சி இழுத்தடித்தமைக்கு இன்னொரு காரணமும் இருந்தது. அதாவது இறுதிக்கட்டத்தில் அதிகாரப் பங்கீடு — தொகுதிப் பங்கீடு தொடர்பாக உடன்பாடு காணப்பட வேண் டும் என கட்சிகளிடையே முடிவு செய்யப்பட்டது. முன்னணியை - முன்னெடுத்துச் செல்வதற்கும் முன்னணியின் பொது வேலைத் திட்டமான "தேர்தல் விஞ்ஞாபனத்தில்" கைச்சாத்திடுவதற்கு முன் நிபந்தனையாக முன்னணிக் கட்சிகளிடையே - பேச்சுவார்த் தைகளின் இறுதிக்கட்டத்தில் அதிகார மற்றும் தொகுதிப் பங் கீடு தொடர்பில் பரஸ்பர இணக்கம் காணப்பட வேண்டும் எனப் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது தெரிந்ததே

## ஜே. வி. பி. வெளியேற்றம்:

இந்த இறுதிக் கட்டத்துக்குக் கட்சிகள் வருவதை சுதந்திரக் கட்சி வேண்டுமென்றே தாமதப் படுத்துகிறது என்றும், அதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம் மற்றும் தொகுதிப் பங்கீடு தொடர்பான விடயங்களில் ஜே வி. பி.க்கும் (மற்றும் கட்சிகளுக்கும்) சுதந்திரக் கட்சிக்கு மிடையே உடன்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடனேயே சுதந்திரக் கட்சி பேச்சுவார்த்தைகளின் இறுதிக் கட்டத்துக்கு வருவதைத் தவிர்க்கிறது என்றும் குற்றஞ் சாட்டி ஜே. வி பி உத்தேச முன்னணியை விட்டு ஒக்டோபர் பிற்பகுதியில் வெளியேறியது.

## சட்டத் தடை என்ற நொண்டிச் சாக்கு:

ஒக்டோபர் 29ஆம் திகதி சிறிமா முன்னணிக் கட்சிகளை ஆச்சரியத்துக்குள்ளாக்கும் செய்தியொன்றைத் தெரிவித்தார். "சட்டப் பிரச்சினைகள் காரணமாகத் தான் சுதந்திரக் கட்சி அபேட்சகராக "கை" சின்னத்தின் கீழ் தான் போட்டியிடுவேன்" என்றார். இதற்கு கூறப்பட்ட சட்டக் காரணம் பின் வருமாறு:

ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனம் தாக்கல் செய்யும் கடைசித் திகதி 09ஆம் திகதி என்றும் ஜனாதிபதித் தேர்தல் டிசம்பர் 19ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நவ. 19 என்றிருந்தது. இந்தக் கால எல்லைக்குள் ஒரு புதிய கட்சியைப் பதிவு செய்ய முடியாது. எனவே பொது முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய முடியாது. ஆகவே சுதந்திரக் கட்சியின் பெயரில் "கை" சின்னத்தில் போட்டியிடுவதாக சிறிமா அறிவித்தார்.

"சுயேச்சை அபேட்சகராக அல்லது அங்கீகாரம் பெறாத கட்சியின் சின்னமொன்றின் கீழ் போட்டியிடலாம் எனத் தெரிவிக்கப்பட்ட யோசனையையும் அவர் நிராகரித்து விட்டார். இதனைத் தொடர்ந்து ஈ. எல். ஜே. பி.யும் முன்னணியிலிருந்து வெளியேறியது.

முஸ்லிம் காங்கிரஸ் உட்பட ஏனைய 6 கட்சிகளும், இந்த சூழ்நிலைகளிலும் பொது முன்னணியில் தொடர்ந்து இடம் பெற்று வந்தன. ஏற்கனவே உடன்பட்டுக் கொண்டபடி முன்னணியின் கட்சிகள் முன்னணியின் பொது வேலைத்திட்டத்தில் கைச்சாத்திட முன்நிபந்தனையாக தேர்தல் தொகுதி உடன்பாட்டை உறுதிப்படுத்த வேண்டிய கட்டம் வந்தது. பொது முன்னணி பதிவு செய்யப்படாததாலேயே இந்த உடன்பாடு அவசியமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பைக் கோரியது தலைவருக்கல்ல:

இந்த அடிப்படையில் நவம்பர் 8ஆந் திகதி இரு கட்சிகள் தமது தொகுதி ஒதுக்கீட்டுக் கோரிக்கையை முன்வைத்தன. எம். ஈ. பீ. கொழும்பு மாவட்டத்தின் 3வலயங்களில் ஒன்றான கொழும்பு வெளி (மகரகம, அவிசாவளை முதலியன) பிரதேசத்தைப் பெற்றுக்கொண்டது. இதன்படி இந்த வலயத்தில் போட்டியிடும் சுதந்திரக் கட்சி வேட்பாளர்கள் (முன்னாள் சபா நாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்ன உட்பட) எம். ஈ. பீ.யின் வண்டிச் சக்கர சின்னத்தின் கீழ்தான் போட்டியிட வேண்டும்.

இந்த அடிப்படையில் 10 தொகுதிகளை/ஆசனங்களை முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒதுக்கித் தருமாறு கேட்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் மூன்று தேர்தல் மாவட்டங்களையும், கொழும்பு நகர வலயத்தையுமே முஸ்லிம் காங்கிரஸ் கோரியது! இந்த இரண்டு இடங்களிலுமிருந்து 7 ஆசனங்களை முஸ்லிம் காங்கிரஸ் பெறுமென எதிர்பார்க்கப்பட்டதால் ஏனைய 3 ஆசனங்களையும், சுதந்திரக்கட்சியின் தேசியப்பங்கீட்டில் (National PR) (முதல் 10 இடங்களுக்குள்) ஒதுக்கித் தருமாறும் முஸ்லிம் காங்கிரஸ் கோரியது.

கொழும்பு நகர வலயத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கோரியதன் காரணம் அவரோ அல்லது அவரின் நண்பர்களோ அங்கு போட்டியிட வேண்டுமென்பதற்காகவே என்று பொய் வதந்திகள் பரப்பப்பட்டன. இது முழுப் பொய்யாகும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தனது பிறந்தகமான அம்பாறை மாவட்டத்திலேயே போட்டியிடவுள்ளார். நண்பர்களுக்காகவும் அல்ல. உண்மையில் சகல இன மக்களையும் கொண்டு கொழும்பு நகர வலயம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும் அதில் தமிழ், முஸ்லிம்களுக்கு உரிமையுண்டு என்பதையும் காட்டவே!

## நியாயமான கோரிக்கை:

முஸ்லிம் காங்கிரஸ் 10 ஆசனங்களைக் குருட்டுத்தனமாகக் கேட்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சிறிமாவுக்குப் பெற்றுக்கொடுக்கும் வாக்குகளின் அடிப்படையில் தான் கேட்டது. இதுவரை நடந்த 3 கட்ட மாகாண சபைத் தேர்தல்களில் முஸ்லிம் காங்கிரஸ் 3 லட்சத்து 25,000 வாக்குகளை போட்டியிட்ட இடங்களில் பெற்றுள்ளது. போட்டியிடாத இடங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவுடன் பொது முன்னணி வேட்பாளர் (சிறிமா) 7 லட்சம் முஸ்லிம் வாக்குகளில் 4 லட்சம் வாக்குகளை முஸ்லிம் காங்கிரஸ் மூலம் பெறுவார். இது சிறிமா வெற்றிபெறத் தேவைப்படும் மொத்த வாக்குகளில் 11% ஆகும்.

சுதந்திரக் கட்சியிலுள்ள முஸ்லிம் பிரமுகர்களால் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் வாககுகளைப் பெறுவார் என்பது காங்கிரஸின் கணிப்பாகும். எனவே 4 ஆசனங்களை சுதந்திரக் கட்சி முஸ்லிம்களுக்கு ஒதுக்கலாம். இது முஸ்லிம் காங்கிரஸுக்குக் கொடுக்கும் முஸ்லிம் ஆசனக் கோட்டாவிற்கு மேலதிகமானது. மொத்தம் 14 ஆசனங்கள்.

அடுத்த பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் முஸ்லிம்களுக்கு 8% விகிதாசாரப்படி 18 ஆசனங்கள் கிடைக்க வேண்டும் $12\frac{1}{2}$% வெட்டுப்புள்ளி உள்ளபோது 10 ஆசனங்களாவது கிடைக்காது. அரசியலமைப்புச் சட்டத்தடைகளுக்கு மத்தியில் முஸ்லிம் சமூகத்திற்கு ஆகக்கூடிய பிரதிநிதிகளைப் பெற வழிகாட்டும் பொறுப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கிறது.

சுதந்திரக் கட்சி முஸ்லிம் காங்கிரஸுக்கெதிராகச் சதி செய்யாமல் தேர்தல் ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டிருந்தால் எமது கணிப்பின்படி 18 ஆசனங்களையும் பின்வருமாறு பெற்றிருக்கலாம்.

| | | |
|---|---|---|
| i) | தேர்தல் ஒப்பந்தப்படி பொது முன்னணியூடாக முஸ்லிம் காங்கிரஸ் பெறும் ஆசனங்கள். | 10 |
| ii) | சுதந்திரக் கட்சி அதன் முஸ்லிம் பிரமுகர்களூடாக பெறக் கூடிய வாக்குகளுக்காக வழங்க வேண்டிய ஆசனங்கள். | 04 |
| iii) | ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் மூலம் வரக்கூடிய முஸ்லிம் ஆசனங்கள். | 04 |
| | | 18 |

இதிலிருந்து சுதந்திரக் கட்சியிலுள்ள முஸ்லிம் பிரமுகர்களின் நலன்களைப் பாதிக்கக்கூடிய வகையில் முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கை அமையவில்லை என்பது தெளிவாகிறது. பேருவளை, புத்தளம் ஆகிய முஸ்லிம் தொகுதிகளையும் தனக்கு ஒதுக்கித் தருமாறு முஸ்லிம் காங்கிரஸ் கேட்டதாகவும் பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டது. உண்மையில் முஸ்லிம் காங்கிரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டிருக்க வேண்டும். அந்த உரிமை முஸ்லிம் காங்கிரஸிக்கு உண்டு எனினும் சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் பிரமுகர்களை அதிருப்திப் படுத்த விரும்பாமையினால் முஸ்லிம் காங்கிரஸ் அவற்றைக் கேட்கவில்லை. ஆனால் சுதந்திரக் கட்சி தான் இவ்விருதொகுதிகளையும் கூட முஸ்லிம் காங்கிரஸிக்கு விட்டுக்கொடுக்க உடன்பட்டது.

எனவே முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சியிலுள்ள முஸ்லிம் பிரமுகர்களுக்கு குழிபறிக்க முயற்சித்தது என்ற பிரச்சாரம் ஆதாரமற்றது என்பது இதிலிருந்து தெளிவாகும். உண்மையில் சுதந்திரக் கட்சியிலுள்ள முஸ்லிம்களும், சுதந்திரக் கட்சியுடன் உறவாடும் தான் தோன்றி வங்குரோத்து முஸ்லிம் தலைவர்களும் தான் முஸ்லிம் காங்கிரஸுக்குக் குழி பறிக்க முயற்சித்தார்கள். அதன் மூலம் முழு முஸ்லிம் சமூகத்துக்குமே, குழிபறிக்க முயற்சித்தார்கள் :

அன்பு முஸ்லிம் வாக்காளர்களே :

இலங்கை அரசியல் என்ற குடும்ப வாழ்வில் முஸ்லிம் சமூகமென்ற மனைவி 40 வருடங்கள் மலடியாயிருந்தாள். '88ல் அந்தத் தாய்க்கு ஒரே ஒரு செல்லப் பிள்ளையாகப் பிறந்த முஸ்லிம் காங்கிரஸை அதே ஆண்டிலேயே-ஐயாமுல் ஜாஹிலியாக்கால அறபிகள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தது போல - நமது சமூகத்தின் அரசியல் துரோகிகளால் குழிதோண்டிப் புதைக்கச் சதிசெய்யப்பட்டது. இதற்கு சுதந்திரக் கட்சி உடந்தையாக இருந்தது என்பதைத் தொடாச்சியாக நடந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுதந்திரக்கட்சி செய்த இந்த சதிக்கு சுதந்திரக் கட்சியிலுள்ள முஸ்லிம் பிரமுகர்களும் உடந்தையாக இருந்தார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் தனக்காக எதையும் பொது முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிமாவிடம் கேட்கவில்லை. முஸ்லிம் சமூகம் லட்சக் கணக்கில் ஐக்கியப்பட்டு வழங்கிய வாக்கின் மூலம், அங்கீகாரத்தின் மூலம், அதிகாரத்தின் மூலம், தனது சமுதாயத்திற்கு வேண்டிய உரிமைகளைப் பெறவே இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது.

ஆனால் முஸ்லிம் சமூகத்தின் துரோகிகள் நிபந்தனையின்றி சிறிமாவிடம் சரணடைந்ததன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் சமூகத்திற்காக நிபந்தனையுடன் நடத்திய-பேரம் பேசி உரிமைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் போராட்டத்தை நசுக்க முயற்சித்தார்கள். தேர்தல் காற்று வீசும்போதே சமூகத்திற்காகக் தூற்றிக் கொள்ள வேண்டும் என்று சாணக்கிய மாசச் செயற்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் முயற்சிக்கு முட்டுக் கட்டை போட்டார்கள். முஸ்லிம் காங்கிரஸின் முகத்தில் கரிபூச முயற்சித்தார்கள்.

ஒரு தேர்தலைச் சுதந்திரமாக எதிர்நோக்கத்திராணியற்ற இஸ்லாமியத் தமிழர்கட்சிக்காரர்களும், முஸ்லிம் சமூகத்தின் குரல் வளையை நசுக்கும் இந்தச் சதிக்கு; முஸ்லிம் காங்கிரஸை உயிரோடு குழி தோண்டிப் புதைக்கும் இந்த அரசியல் வஞ்சகர்களின் சதிக்கு; அரசியல் அயோக்கியர்களின் சதிக்கு; வங்குரோத்து அரசியல்வாதிகளின் சதிக்கு; சிறிமாவுடன் சேர்ந்து செயற்பட்டார்கள்.

## கோரிக்கையில் மாற்றமில்லை :

நவம்பர் 08ஆம் திகதி நாம் முன்வைத்த இந்தத் தொகுதிப் பங்கீட்டுக் கோரிக்கை தொடர்பில் 09ஆம் திகதி விட்டுக் கொடுப்பதாகவும், கொழும்பு நகர வலயத்தைக் கைவிட வேண்டும் என்றும் கேட்டார்கள். இது தொடர்பில் சுதந்திரக் கட்சி எம். பி. ஜனாப் ஹலீம் இஷாக்கின் வீட்டில் ஒரு பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் காங்கிரஸ் அழைக்கப்பட்டது. திரு. தினேஷ் குணவர்த்தன எம். பி.யும் எம். ஈ. பீ. செயலாளரும் அங்கு சமூகமளித்திருந்தனர். அந்தப் பேச்சுவார்த்தைகளின் போது தான் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆசனங்களைக் கூட முஸ்லிம் காங்கிரஸிற்கு விட்டுக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் சுதந்திரக் கட்சி உள்ளது என்ற நிலைப்பாடு தெளிவாகியது. கிழக்கில் உள்ள சுதந்திரக் கட்சி முஸ்லிம் பிரமுகர்களையும், முஸ்லிம் காங்கிரஸ் தனது கட்சி சார்பில் போட்டியிடச் சம்மதிக்க வேண்டும் என்ற சுதந்திரக் கட்சியின் கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கத் தயாராக இருக்கவில்லை. இதிலிருந்து கிழக்கின் 5 முஸ்லிம் தொகுதிகளைக் கூட சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸிற்கு (போட்டித் தவிர்ப்பு செய்து) விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

## கிழக்கின் பிரச்சாரப் பொறுப்பு :

அது மட்டுமல்ல; கிழக்கில் சிறிமாவின் ஜனாதிபதி பிரச்சாரப் பொறுப்பு முஸ்லிம் காங்கிரஸிடமே ஒப்படைக்கப்பட வேண்டுமெனக் கோரினோம். இதற்காக அவ்வத் தொகுதி முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் அமைப்பாளர்களுக்கு அதிகாரப் பத்திரம் வழங்கப் பட வேண்டும். இதை முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர்களுக் குத் தர உடன்பட்ட பின்னர், அதற்கு மாற்றமாக சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுக்கே இந்த அதிகாரப் பத்திரங்கள் வழங் கப் பட்டன. அதை முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்க உடன்பட்ட பின்னர், அதற்கான ஆயத்தங்களையும் நாம் செய்து கொண்டி ருக்கையில், சிறிமா தனது கிழக்கு மாகாண அமைப்பாளர்க ளுக்கும், இஸ்லாமியத் தமிழர் கட்சிப் பிரமுகர்களுக்கும் கிழக் கில் அவரது ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார வேலைகளை ஆயத் தம் செய்யுமாறு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கி றார் என்பது முஸ்லிம் காங்கிரஸிற்குத் தெரிய வந்தது. அந்தக் கடிதங்களின் பிரதிகள் தலைவரின் கரங்களுக்கு கிடைத்தன. அத்துடன் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஏற்பாடுகள் அனைத்திற்கும் பொறுப்பாக கலாநிதி பதியுதீன் மஹ்மூதை சிறிமா நியமித்தமை முஸ்லிம் காங்கிரஸை மேலும் விசனத்துக் குள்ளாக்கியது. சுதந்திரக் கட்சி முஸ்லிம் பிரமுகர்கள் ஒரு புற மிருக்க இஸ்லாமியத் தமிழர் கட்சிப் பிரமுகர்களினதும் அதன் தலைவர் அல்லது போஷகரான பதியினதும் ஆதரவை சிறிமா பெற முயன்றது முஸ்லிம் காங்கிரஸுக்கு சிந்தனைக் குழப்பத்தை ஏற்படுத்தியது. அது மட்டுமன்றி இது முஸ்லிம் காங்கிரஸின தும், முஸ்லிம் சமூகத்தினதும் எதிர்பார்ப்புகளையும் சிதறடிப் பது போன்றதாகும்.

## துரோகிகளை சேர்த்து காங்கிரஸிற்கு துரோகம்:

முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சி உட்பட பொது முன் னணியின் ஏனைய கட்சிகளுடன் இணைந்து இலங்கை முஸ்லிம் சமூக நலனுக்காக 3 மாத கால தொடர்ச்சியான பேச்சுவார்த் தைகள் மூலம் உடன்பாடு காணப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வை, இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் உண்டாக்கப்பட்ட முஸ்லிம் பிரச்சினைக்கான தீர்வை, முஸ்லிம் மாகாணத் தீர்வை சிதறடிப்பது போன்றதாகும். பதி தலைமையில் இஸ்லாமியத் தமிழர் முன்னணி இருமுறை இந்தியா சென்று தமிழர் கூட் டணியுடனும், விடுதலைப் புலிகளுடனும் ஒப்பந்தம் செய்தது.

முஸ்லிம் மாகாணக் கோரிக்கையின் சிருஷ்டி கர்த்தாக்களான இவர்கள், தமிழர் கூட்டணிப் பிரமுகர் திரு. நீலன் திருச்செல்வத் தின் சதி வலையில் சிக்கி, முஸ்லிம் மாகாணக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு வேறொரு ஒப்பந்தத்தை தமிழர் கூட்டணியினருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் இன்னொரு ஒப்பந்தத்தைப் புலிகளுடனும் கைச்சாத்திட்டு விட்டு வந்தார்கள். அதன் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்படுவதற்கும், இணைந்த ஒரே தமிழ் பெரும்பான்மை மாகாணத்திற்கும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கும் ஆதரவு தெரிவித்து உடன்படிக்கைகள் செய்துவிட்டு வந்தார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அங்கம் வகித்து, பதி தலைமையில் இயங்கிய முஸ்லிம் கவுன்ஸிலில், முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தது மட்டுமல்லாமல் பெரும்பாலான கிழக்கு முஸ்லிம் இயக்கங்களின் ஆணையையும் அதற்காக அட்டாளைச்சேனைப் பிரகடனத்தில் பெற்றது.

★ கிழக்கிலங்கை பள்ளிவாயல்கள் சம்மேளனக் கூட்டத்தில் இந்த ஆணையைப் பெற்றுத் தந்த பெருமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரையே சாரும்.

அதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் நாடெங்கிலும் சென்று முஸ்லிம் மாகாணசபைக் கொள்கையைப் பிரச்சாரம் செய்து இலங்கையின் சகல பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் மக்களிடமிருந்தும் முஸ்லிம் மாகாணக் கோரிக்கைக்கான ஆணையைப் பெற்றது. இது உலக முஸ்லிம்களுக்குத் தெரிந்த விடயமாகும்.

அப்போதெல்லாம் சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் பிரமுகர்கள் முஸ்லிம் மாகாணசபைக் கோரிக்கையைக் கேலிசெய்து எள்ளி நகைத்தார்கள். இதையெல்லலாம் பொருட்படுத்தாமல் நடந்து முடிந்த 3 கட்ட மாகாணசபைத் தேர்தல்களிலும் முஸ்லிம் மாகாணசபைக்கான ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்களிடமும் கேட்டிருந்தது ஏறத்தாழ கிழக்குக்கு வெளியே வாழும் 1½ லட்சம் முஸ்லிம்களும் கிழக்கில் 1¾ லட்சம் முஸ்லிம்களும் இதற்கான ஆதரவை முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்கினார்கள்.

## முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை சுதந்திரக் கட்சி ஏற்றது ஏன்?

பொது முன்னணிப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு மாற்றீடான இனப் பிரச்சினைத் தீர்வு பற்றிய சிந்தனை எதுவுமில்லாமல் யானை தின்ற விளாம்பழம் போல் சுதந்திரக் கட்சி முழு உலகத்தையுமே ஏமாற்றி வந்த உண்மையை முஸ்லிம் காங்கிரஸ் அறிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்துடன் சிறிமாவும், சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் சோமசார தஸாநாயக் காவும் நடத்திய 6 மணி நேரப் பேச்சு வார்த்தையின் பின்பு மலைக்கு மாடேற்றிய முயற்சியாக சுதந்திரக் கட்சிக்கு அரசியல் கற்பிக்கும் விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றியீட்டியது. இதனால் சுதந்திரக் கட்சி - முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்க் காங்கி ரஸும் சேர்ந்து முன்வைத்த இனப் பிரச்சினைக்கான புதிய தீர் வைப் பற்றிப் பிடித்துக் கொண்டது.

ஆனால் பதி தலைமையில் இஸ்லாமியத் தமிழர் கூட்டணிக் குழு இரு தடவை சென்னை சென்று இரு தமிழ்க் குழுக்களுடன் ஒப்பந்தம் செய்து முஸ்லிம் மாகாணத்துக்கான போராட்டத்தை முற்றாகக் கைகழுவி விட்டு வந்தது. வடக்கு, கிழக்கு இணைப்பை எதுவித நிபந்தனையுமின்றிச் சலுகைகளுக்காக நிரந்தரமாக்க உடன்பட்டு விட்டது.

## முஸ்லிம் மாகாணப் போராட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்துச் சென்றது:

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றது. சுதந்திரக்கட்சி, தமிழ் காங்கிரஸ் உட்பட பொது முன்னணியின் ஏனைய சிங்களக்கட்சி களும் அதனை அங்கீகரிக்கச் செய்து முஸ்லிம் மாகான சபைக் கோரிக்கையை பொதுமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தி லேயே இனப்பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாக இடம்பெறப் போராடி அதில் வெற்றியும் கண்டது.

இதன் மூலம் எதிர்காலத்தில் முஸ்லிம் மாகாணக் கோரிக்கை, வேறு கட்சி ஆட்சியில், நாடாளுமன்றத்தில் இன்ஸா அல்லாஹ் சட்டமாக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டால் பொது முன்னணியின் இந்தக்கட்சிகள் இதனை எதிர்த்து ஒரு வார்த்தையும் பேச முடி யாதபடி செய்துவிட்டது முஸ்லிம் காங்கிரஸ். ஏனெனில் முஸ்லிம் மாகாணம் பொது முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ளது.

அது மட்டுமல்ல அண்மையில் நடந்த மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு முஸ்லிம்களின் ஏகோபித்த ஆணையையும் அதற் காகப் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் இந்த முஸ்லிம் மாகாணப் போராட்டத்தை முன்னெடுத்துச் சொல்லாவிட்டிருந்தால் பதி தலைமையிலான இஸ்லாமியத்தமிழர்கட்சி, தமிழ்குழுக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் பின்னர் முஸ்லிம் மாகாண கோரிக்கை ஆற்றிலே கரைத்த புளியாகப் போயிருக்கும். மாறாக முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு உயிரூட்டி சிறிமாவின் பொது முன்னணித் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அதை இடம் பெறச் செய்து முஸ்லிம் மாகாண கோரிக்கைக்கு இன்று உரமூட்டியுள்ளது. அதனை ஜனரஞ்சகப் படுத்தியுள்ளது.

அப்படியிருக்க முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை தமிழ் குழுக்களுடனான இரு ஒப்பந்தங்களின் மூலம் கைவிட்ட முஸ்லிம் பிரமுகர்களை சிறிமா தன்னுடன் சேர்த்துக்கொண்டது முஸ்லிம் காங்கிரஸை ஆழமாகச் சிந்திக்கவைத்தது. முஸ்லிம் மாகாணம் அமைக்கும் தனது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியை சிறிமா - தான் பதவிக்கு வந்தவுடன் அமுல் படுத்துவாரா? ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸினதும், முஸ்லிம் சமூகத்தினதும் ஆதரவைப் பெற்று எப்படியாவது ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த இனப் பிரச்சினைத் தீர்வுக்கு உடன்பட்டுக் கையெழுத்திட்டாரா? உண்மையாகவே இந்தத் தீர்வைத் தான் பதவிக்கு வந்ததும் அமுல்படுத்தும் நல்லெண்ணம் சிறிமாவுக்கு உண்டா? அப்படியானால் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முற்றாகக் கைகழுவிய முஸ்லிம் சமூகத்தின் துரோகிகளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது ஏன்? அவர்களுக்கே கிழக்கு மாகாணத்தில் தனது ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரப் பொறுப்பை ஒப்படைத்தது ஏன்? கடந்த காலங்களில் ஜே. ஆருடன் கூடிக்குலவிய பதி, 11 வருடகாலம் சிறிமாவுடன் தொடர்பைத் துண்டித்திருந்த அதே பதி, சிறிமாவைப் பச்சை இனவாதி என்று கூறிய பதி, நீலமும் வேண்டாம், பச்சையும் வேண்டாமென முஸ்லிம்களுக்கு உணர்வூட்டிய பதி - மீண்டும் சிறிமாவுடன் போய் நிபந்தனை எதுவுமின்றிச் சரணடைந்தது ஏன்?

இந்தக் கேள்விகள் முஸ்லிம் காங்கிஸின் மனதில் பின்வரும் சந்தேகங்களை ஏற்படுத்தின.

இனப்பிரச்சினைக்கான புதிய தீர்வை - முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை ஆட்சிக்கு வந்ததும் சிறிமா உண்மையாக அமுல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவாரா? சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமை தொடர்பாக பொது முன்னணி விஞ்ஞாபனத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சேர்த்துக்கொண்ட எழுத்துமூல வாக்குறுதிகளை சிறிமா ஆட்சிக்கு வந்ததும் அமுல் படுத்துவாரா? அல்லது வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வந்தபின் - இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் முஸ்லிம்களைத் தேர்தல் காலங்களில் கறிவேறிப்பிலை போலப் பாவித்துவிட்டு வீசி எறிந்தது போல மீண்டும் எறியத் திட்டம் தீட்டுகிறாரா? ஜனாதிபதித் தேர்தலில் தான் பதவிக்கு வருவதற்காக மட்டும் இந்தப் பொது முன்னணியைப் பயன்படுத்த சிறிமா முயற்சிக்கிறாரா? பொதுத் தேர்தலுக்கும் இந்தப் பொது முன்னணியைப் பாவிக்க விரும்புகிறாரா? அல்லது ஏறிவந்த ஏணியை எட்டி உதைத்துவிட்டு எம்மை நட்டாற்றில் விடப்பார்க்கிறாரா?

## சந்தேகங்களை நிவர்த்திசெய்ய சிறிமாவுக்கு விஷப் பரீட்சை :

இதுபோன்ற சந்தேகங்கள் முஸ்லிம் காங்கிரஸின் மத்தியில் எழுந்தன. எனவே முஸ்லிம் காங்கிரஸ் சிறிமாவின் நல்லெண்ணத்தை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே பரீட்சித்துப் பார்க்க விரும்பியது.

ஆழமறியாமல் காலை விடக்கூடாது. கழுத்தைக் கொடுத்தாலும் எழுத்தைக் கொடுக்கக் கூடாது. எனவேதான் பொது முன்னணியில் கைச்சாத்திடுவதற்கு முன் நிபந்தனையாக தேர்தல் தொகுதிப் பங்கீடு தொடர்பாக உடன்பாடு கண்டு, அந்த உடன்பாட்டை எழுத்துமூல உடன்பாடாக்கி சம்பந்தப்பட்ட கட்சித் தலைவர்கள், அந்த உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டுமென்ற நிபந்தனையை முஸ்லிம் காங்கிரஸ் விதித்தது.

ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலைவிட நடாளுமன்றத் தேர்தலே முஸ்லிம் சமூகத்திற்கும், முஸ்லிம் காங்கிரஸிற்கும் முக்கியமானது.

ஜனாதிபதியாக இராமன் வந்தாலென்ன? இராவணன் வந்தாலென்ன? இடையிலே வந்த குரங்குதான் வந்தாலென்ன பரவாயில்லை. '89ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சுதந்திரமான முஸ்லிம் பிரதிநிதிகள் பலர் நாடாளுமன்றம் செல்வதை உறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப்படுத்த வேண்டியது முஸ்லிம் காங்கிரஸின் தலையாய கடமையாகும்.

முஸ்லிம் மாகாணக் கோரிக்கை சிறிமாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்றுள்ளது. அதனைத் தான் ஆட்சிக்கு வந்ததும் சிறிமா அமுல் படுத்துவாரென்ற குருட்டு நம்பிக்கையில் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்து வைக்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கவில்லை. மாறாக நாடாளுமன்றத்தில் சுதந்திரமான முஸ்லிம் எம்பீக்கள் பலர் இருப்பதன் மூலம்தான் பொது முன்னணியின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும்படி அடுத்த ஜனாதிபதியாக வரும் ஐயாவையோ, அம்மாவையோ வற்புறுத்தலாம் என்று முஸ்லிம் காங்கிரஸ் சிந்தித்தது.

சிறிமாவின் நல்லெண்ணத்தின் மீது சந்தேகம் ஏற்பட்டதால் ஏற்கனவே ஜே. வி. பியும், ஈ. எல். ஜே. பியும் உத்தேச முன்னணியிலிருந்து வெளியேறிவிட்டன. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பேனென்று கூறும் சிறிமா தான் பதவிக்கு வந்ததும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகத் தொடர்ந்தும் இருந்துகொண்டு உத்தேசப் பொது முன்னணியை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவுசெய்து கொள்வதைத் தடுத்து பொதுத்தேர்தலில் பொது முன்னணியிலுள்ள கட்சிகளை (முஸ்லிம் காங்கிரஸ் உட்பட) சுதந்திரக் கட்சி சார்பில் கைச்சின்னத்தில் போட்டியிடுமாறு பலவந்தப் படுத்தவும் கூடும். அதற்கு இந்தக் கட்சிகள் இணங்காத பட்சத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட ஏனைய கட்சிகளும் சுதந்திரக் கட்சி வேட்பாளர்களைப் பொதுத்தேர்தலில் எதிர்த்துப் போட்டியிடக்கூடிய இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவேதான் சிறிமாவின் நல்லெண்ணத்தை நாடிபிடித்துப் பார்க்க முஸ்லிம் காங்கிரஸ் விரும்பியது. பொது முன்னணி வேலைத்திட்டத்தில் கைச்சாத்திடமுன்னர் முஸ்லிம் காங்கிரஸின் எழுத்தமூலமான தேர்தல் தொகுதி உடன்பாடு, சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமா உட்பட ஏனைய கட்சித் தலைவர்களாலும் கையெழுத்திடப்பட வேண்டுமென்று முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சு பதவிகளுக்கு அஷ்ரஃப் அசையவில்லை

தேர்தல் தொகுதி ஒதுக்கீடு விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸிற்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் கொழும்பு நகரவலயம் தொடர்பில் நிலவிய இழுபறியைப் பிரச்சினையின்றி முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக முஸ்லிம் காங்கிரஸிற்கு இரு அமைச்சுப் பொறுப்புகளும், இரு பிரதி அமைச்சுப் பொறுப்புகளும் தருவதாக சுதந்திரக் கட்சியால் உறுதி அளிக்கப்பட்டது. முன்னைய முஸ்லிம் தலைமைத்துவத்தைப்போல முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தையும் பதவி, ஆசை காட்டி மடக்க முயற்சி செய்யப்பட்டது. இரு அமைச்சுக்கள், இரு பிரதி அமைச்சுக்கள் மட்டுமல்ல சிறிமா அரசின் முழு அமைச்சரவையையும் தந்தாலும்கூட அது எமக்கு வேண்டாம். முஸ்லிம்களின் உரிமையைப் பெறுவதே எமது நோக்கமென தலைவர் அஷ்ரஃப் உறுதியாகச் சொன்னார். அமைச்சுப் பதவிகளுக்காக அடிமைப்பட்டயம் எழுதிக்கொடுக்க அஷ்ரஃப் தயாராயிருக்கவில்லை

''செங்கதிரும், தண்மதியும் சேர்த்துக் கையில் தந்திடினும் எம் கொள்கை விடமாட்டோம்'' என்றார் தலைவர் அஷ்ரஃப். இதனால் சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் இழுபறி நீடித்தது. தனது இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பக்கம் தலைகாட்டப்போவதில்லை என்றார் தலைவர் அஷ்ரஃப்.

## கிழக்கு மாகாணத் தேர்தல்:

இப்போது முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மும்முரமாக பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நேரடிப் பிரச்சார வேலைகளில் ஈடுபட கிழக்கு மாகாணம் சென்றிருந்தார்.

இதே வேளை 20ம் திகதி காலை பொது முன்னணி வேலைத் திட்டம் கைச்சாத்திடுவதாக இருந்த போதும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அப்போது கிழக்கு மாகாணத்திலிருந்ததால் கைச்சாத்திடுவது வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 20 ஆந் திகதி பிற்பகல் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கொழும்பு திரும்பி விட்டார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் 20ஆந் திகதி வெளியாகின. ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து ஐ.தே.கட்சி ஜனாதிபதி வேட்பாளர் திரு. பிரேமதாஸா, முஸ்லிம் காங்கிரஸைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு 20ஆந் திகதியே தூதனுப்பினார். உத்தேச பொது முன்னணியிலுள்ள கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாலும், உண்டு அல்லது இல்லை என்ற வகையில் முன்னணியில் இடம் பெறும் சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் இறுபறி முடிவு காணப்படாததாலும் திரு பிரேமதாஸாவுடனான பேச்சுக்குத் தற்போது தயாரில்லை என முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்தது.

திரு. பிரேமதாஸா, முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாராகிறார் என்பதை அறிந்த சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸின் தொகுதிப் பங்கீட்டுக் கோரிக்கைக்கு உடன்படத் தயாராகவிருப்பதாகவும் கிழக்கு மாகாணம், கொழும்பு நகர வலயம் உட்பட, புத்தளம், பேருவளை, கண்டி என்பன வற்றையும் முஸ்லிம் காங்கிரஸிற்கு விட்டுக் கொடுக்கத் தயாராக விருப்பதாகவும் 21ம் திகதி தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை அது நவம்பர் 08 ஆம் திகதி முன்வைத்த தொகுதிப் பங்கீட்டுக் கோரிக்கையில் எந்தவித மாற்றமுஞ் செய்யவில்லை. நவ. 19 தேர்தல் முடிவுகள் எதிர்பார்த்ததை விட வெற்றியாக அமைந்தது என்பதற்காகத் தனது கோரிக்கையை அதிகரிக்கவுமில்லை.

## சிறிமா சம்மதம்:

நவ. 22ஆம் திகதி உத்தேச முன்னணியின் பேச்சாளர் திரு. குமார் பொன்னம்பலம், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை ரோஸ் மீட் பிளேசுக்கு வருமாறு அழைத்தார். முஸ்லிம் காங்கிரஸின் தொகுதிப் பங்கீட்டுக் கோரிக்கைகள் முற்றாக ஏற்றுக்கொள்ளப் பட்டு விட்டதாகவும் 'எல்லாம் சரி' என்பதாகவும் உத்தேச முன்னணியில் கைச்சாத்திடுவது பற்றிப் பேசவருமாறும் அழைப்பு விடுத்தார். ஏனைய கட்சித் தலைவர்கள் வருவதாகவும் அறிவித்தார். தொகுதிப் பங்கீட்டுக் கோரிக்கை நிறைவேற்றப் படும் வரை ரோஸ் மீட் பிளேசுக்கு (சிறிமாவின் இல்லம்) செல்வதில்லை எனத் தீர்மானித்திருந்த தலைவர் அஸ்ரஃப், முஸ்லிம் காங்கிரஸின் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டதாகக் கூறி அழைப்பு விடுத்ததால் ரோஸ் மீட் பிளேசுக்குச் சென்றார். 6 கட்சிப் பிரமுகர்களும் அங்கு சமூகமளித்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு சமூகமளித்திருந்த திரு. அநுரா பண்டாரநாயக்கா
முஸ்லிம் காங்கிரஸின் தொகுதிப் பங்கீட்டுக் கோரிக்கைக்குத்
தனது தாயார் OK தெரிவித்து விட்டதாக தலைவர் அஷ்ரஃபி
டம் கூறினார். கொழும்பு நகர வலயம் தொடர்பில் குறிப்பாக
தலைவர் அஷ்ரஃப் கேட்டபோது, அதற்கும் தனது தாயார் OK
பண்ணி விட்டதாக அநுரா கூறியதுடன், இது தொடர்பாக
மேற்கொண்டு ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்குமாறு
தனது தாயார் தனக்கு அதிகாரமளித்துள்ளதாகவும் கூறினார்.
(முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப், பொதுச் செயலாளர்
ஒஸ்மான், தவிசாளர் சேகு இஸ்ஸதீன் ஆகியோரும் இந்தக்
கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர்.) எனவே அநுரவின் சம்
மதத்தின் பேரில் சுதந்திரக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸிற்கு
மிடையிலான தேர்தல் தொகுதி உடன்பாட்டை எழுத்து மூல
மான உத்தியோகபூர்வ உடன்படிக்கையாகத் தயாரிப்பதற்குத்
தீர்மானிக்கப்பட்டது.

24ம் திகதி வியாழக்கிழமை 12.05 மதிய சுபவேளையில் கட்
சித் தலைவர்கள் பொது முன்னணி உடன்படிக்கையில் கைச்சாத்
திடுவதென்றும், அதற்கு முன்பாக சுதந்திரக் கட்சிக்கும், முஸ்
லிம் காங்கிரஸிற்குமிடையேயான பொதுத் தேர்தல் உடன்படிக்
கையில் கைச்சாத்திடுவதென்றும் 25ஆம் திகதி முடிவுசெய்யப்
பட்டது.

மறுநாள் 23ஆம் திகதி புதன்கிழமை காலை லிபரல் கட்சித்
தலைவர் கலாநிதி சாணக்க அமரதுங்கவின் இல்லத்தில் கட்சித்
தலைவர்கள் சந்தித்து சுதந்திரக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிர
ஸிற்குமிடையேயான பொதுத் தேர்தல் உடன்படிக்கையைத்
தயாரிப்பது என்றும், 22ஆம் திகதி ரேஸ் மீட் பிளேஸில் வைத்து
முடிவு செய்யப்பட்டது. ஏனெனில் 24ஆம் திகதி வியாழன் நண்
பகல் பொது முன்னணி உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்
னர், இந்தத் தேர்தல் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டி
இருந்ததால், அந்த உடன்படிக்கையைப் புதன்கிழமையே தயா
ரித்து முடிவாக்கி, திருமதி சிறிமாவின் பார்வைக்கு அனுப்பி
வைக்க வேண்டியிருந்தது.

எனினும் திட்டமிட்டபடி 23ஆம் திகதி கலாநிதி அமரதுங்
கவின் வீட்டில் முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சி தேர்தல்,
உடன்பாட்டை முற்றுப்படுத்த முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22ஆம் திகதி ஞேஸ் மீட் பிளேஸ் சந்திப்பின் போது, சமூகம ளித்திருந்த திரு. தினேஷ் குணவர்த்தனுவிடமும் தலைவர் அஷ்ரப், மூஸ்லிம் காங்கிரஸின் பொதுத் தேர்தல் உடன்பாடு கட் சித் தலைவர்களினுலும் குறிப்பாக சிறிமாவினுலும் OK பண் ணப்பட்டு விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டார். இவ்வாறு பலமுறை ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டியமைக்கான காரணம், அன்றைய 6 கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவுக்குப் பதிலாக அநுரா கலந்து கொண்டமையே!

## வேலைத் திட்டத்தில் வெட்டுக் குத்து :

22ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போது கலந்து கொண்ட கட்சித் தலைவர்களுக்கு 24ஆம் திகதி வியாழன் கைச் சாத்திடப்பட வேண்டிய பொது முன்னணி விஞ்ஞாபனம் என்று கூறி, "1988 ஜனுதிபதித் தேர்தல் வேலைத் திட்டம்" என்ற தலைப் பிலான "தஸ்தாவேஜு" ஒன்று கையளிக்கப்பட்டது. இதனைப் பார்த்த உடனேயே கட்சித் தலைவர்கள் தாம் ஒரே மேசையில் உட்கார்ந்து கடந்த மூன்று மாத காலமாகக் கஷ்டப்பட்டுத் தயாரித்த பொது முன்னணி வேலைத் திட்டத்திற்கும், இந்தப் புதிய வேலைத் திட்டத்திற்குமிடையே வேறுபாடுகள் இருப்பது தெளிவாகியது. எனினும் அந்த இரண்டுக்குமிடையே பாரிய வித்தியாசங்கள் எதுவுமில்லை என சுதந்திரக் கட்சி (தெரிவித்துச்) சமாளித்தது.

உண்மையில் கட்சித் தலைவர்கள் கூடித் தயாரித்த வேலைத் திட்டம், ஏற்கனவே உடன்பட்டுக் கொண்டபடி ஜனுதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் இரண்டுக்குமான வேலைத் திட்டம் (விஞ்ஞாபனம்) ஆகும். ஆனுல் சுதந்திரக்கட்சி அதற்குப் பதிலாக 22ம் திகதி கட்சித் தலைவர்களுக்குக் கையளித்து, 24ம் திகதி கைச்சாத்திட வேண்டுமெனக் குறிப்பிட்டது 1988 ஜனுதிபதித் தேர்தலுக்கு மட் டுமே உரியதாகும்.

இந்தச் செய்கையும் கட்சித் தலைவர்களிடையே ஏற்பட்ட சந்தேகத்தை வலுவடையச் செய்தது. "இந்த 6 கட்சி முன் னணியை சிறிமா - தான் ஜனுதிபதித் தேர்தலில் வெல்லுவதற் கான ஒரு ஆயுதமாகத்தான் பாவிக்கிருர். அதன்பின் எக்கேடு கெட்டுப் போனுலும் பரவாயில்லை. முன்னணியைத் தேர்தல் ஆணை யாளரிடம் புதிய கட்சியாகப் பதியும் நோக்கமும் இல்லை" என்பதே கட்சித் தலைவர்களுக்கும், குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸிற்கும் ஏற்பட்ட சந்தேகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரக் கட்சியின் செயல்கள் இந்தச் சந்தேகங்களைக் குறைப்பதற்குப் பதிலாக வலுவடையச் செய்தன.

22ஆம் திகதி தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தைக் கட்சித் தலைவர்கள் வீடு சென்று தாம் மூன்று மாத காலமாக முயற்சி செய்து தயாரித்த வேலைத் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்த போது தான், இரண்டுக்குமிடையே பெரிய வேறுபாடுகள் பல காணப்பட்டமை தெளிவாகியது. கட்சித் தலைவர்களுக்குத் தெரியாத ''மறைந்த கரங்கள்'' சிலவற்றினால் முன்னைய வேலைத்திட்டம், திட்டமிட்டு மாற்றியமைக்கப் பட்டிருந்தது. பல விடயங்கள் நீக்கப்பட்டும், மேலும் புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டும் இருந்தன.

இதன் காரணமாக கட்சித் தலைவர்களிடையே ஏற்பட்ட அதிருப்தி 24ம் திகதி காலை முன்னணி வேலைத்திட்டத்தில் கைச்சாத்திடவந்தபோது வெறுப்பாக வெளிவந்தது. முன்னைய வேலைத் திட்டத்தில் செய்யப்பட்ட வெட்டுக்குத்துக்களை மீண்டும் சரி செய்ய முயற்சிகள் செய்யப்பட்டன. எனினும் 12.05 மதிய சுபநேரம் நெருங்கி விட்டதால் திருத்தியது பாதி, திருத்தாதது பாதி, சேர்த்தது பாதி, நீக்கியது பாதி என்ற இக்கட்டான இறுதிக் கட்டத்தில் 5 கட்சித் தலைவர்களில் சிலர் வெறுப்புடனேயே வேலைத் திட்டத்தில் கைச்சாத்திட்டனர். ஏனெனில் சுபநேரம் முடிவடைவதற்குள் கைச்சாத்திட வேண்டிய கட்டாயம் இருந்தது. முஸ்லிம் காங்கிரஸின் சுபநேரம் மறுநாள் வெள்ளி ஜும்ஆவின் பின் என்பதால் பிரச்சினை இருக்கவில்லை. 24ஆம் திகதியே, தேர்தல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமலேயே பொது முன்னணியில முஸ்லிம் காங்கிரஸைக் கைச்சாத்திட வைப்பதற்கு செய்யப்பட்ட சதி, முஸ்லிம் காங்கிரஸ் தனது சுபநேரத்தை மாற்றியதால் பலிக்கவுமில்லை.

## தேர்தல் உடன்பாடு:

திட்டமிட்டபடி சுதந்திரக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸிற்குமிடையிலான உடன்பாட்டை 23ஆம் திகதி பூர்த்தி செய்ய முடியாததனால் - 24ஆம் திகதி வியாழன் ஏனைய 5 கட்சிகளும் பொது முன்னணியில் கைச்சாத்திட்ட பின்னர், அன்று பிற்பகல் 1.30 மணியளவில் கட்சித் தலைவர்களும், அநுராவும் லிபரல் கட்சித் தலைவரின் வீட்டில் சந்தித்து இந்தத் தேர்தல் தொகுதி உடன்பாட்டைத் தயாரித்தார்கள். தமிழ்க் காங்கிரஸ் செயலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர் மாத்திரம் வந்திருக்கவில்லை. பொது முன்னணியில் கைச்சாத்திட்ட பின் அவர் வீடு திரும்பி விட்டார். உடன்படிக்கை எழுத்திலாக்கப் பட்டது. அநுரா இந்த உடன்படிக்கையில் சில திருத்தங்களைச் செய்து, சிறிமாவின் சார்பிலும், சுதந்திரக் கட்சியின் சார்பிலும் உடன்படிக்கையை அங்கீகரித்தார். மறுநாள் வெள்ளி 25ம் திகதி ஜும்ஆவின் பின்னர் திட்டமிட்டபடி இந்தத் தேர்தல் உடன்படிக்கையில் சுதந்திரக் கட்சித் தலைவியும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், ஏனைய கட்சித் தலைவர்களும் கையெழுத்திடுவதென்றும், பொது முன்னணி வேலைத் திட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கைச்சாத்திடுவதென்றும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

திருத்தங்கள் செய்யப்பட்ட தேர்தல் உடன்படிக்கையை மீண்டும் ''டைப்'' செய்து அதில் ஒரு பிரதியை 24ஆம் திகதியே சிறிமாவுக்கு அனுப்பி வைப்பது என்று உடன்பட்டது. இதன் படி சுதந்திரக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸிற்குமிடையேயான தேர்தல் உடன்படிக்கை திருத்தங்களுடன், உடனே ''டைப்'' செய்யப்பட்டு, சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவின் கவனத்திற்கு அனுப்புவதற்காக 24ஆம் திகதி இரவு 7.00 மணிக்கே சுதந்திரக் கட்சி உதவிச்செயலாளர் திரு தர்மசிறி சேனநாயக்காவிடம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரால் ஒப்படைக்கப் பட்டது.

## கைச்சாத்துக்கான ஏற்பாடுகள் பூர்த்தி :

25ஆம் திகதி வெள்ளி ஜும்ஆவின் பின்னர், முஸ்லிம் காங்கிரஸ் தான் பொது முன்னணியிலும், அதன் தேர்தல் விஞ்ஞாபனத்திலும், தேர்தல் உடன்படிக்கையிலும் கைச்சாத்திடும் வைபவத்தைச் சிறப்பாகவும், சம்பிரதாய பூர்வமாகவும் செய்வதற்கு 24ஆம் திகதியே சகல ஏற்பாடுகளையும் செய்தது. தொலைபேசி, தந்திச் செய்தி, நேரடி அறிவிப்புக்கள் போன்ற மார்க்கங்கள் மூலம் வியாழக்கிழமை முற்பகலிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு அங்கத்தவர்கள், அபேட்சகர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள், பிரமுகர்கள் ஆகியோருக்கு வெள்ளி ஜும்ஆவின் பின் கைச்சாத்திடும் வைபவத்திற்கு வருமாறு உடனடி, கடுகதி அழைப்புக்கள் விடுக்கப்பட்டன. ஒரு பகுதியினர் வியாழன் மாலையே கொழும்பு வந்து விட்டனர். தூர இடங்களிலுள்ள மறு பகுதியினர் மறுநாள் வெள்ளி காலையே தலைநகர் வந்து சேர்ந்தனர். இவ்வாறு சுமார் 1000 முஸ்லிம் காங்கிரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமுகர்கள் கட்சித் தலைமையகம், தலைவரின் வாசஸ்தலம். கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசல் ஆகிய 3 இடங்களிலும் ஜும் ஆவின் பின் ஒன்றுதிரண்டு ஊர்வலமாக ஃப்ரேஸ் மீட் பிளேஸ் சென்று உத்தியோக பூர்வமாக, சம்பிரதாய பூர்வமாகக் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பத்திரிகை நிருபர்கள், புகைப்படக்காரர்கள், வீடியோ செய்வோர் ஆகியோர் தயார் படுத்தப்பட்டனர். எல்லா ஏற்பாடுகளும் திட்டமிட்டபடி பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## தலைவரைத் தடுமாற வைத்த தகவல்:

இதே வேளை மறுநாள் ஏற்பாடு சம்பந்தமாக நேரில் சந்தித்து சில விடயங்களைப் பேசுவதற்காக தலைவர் அஷ்ரஃப், 24 ஆம் திகதி வியாழன் இரவு 10.30 அளவில் மீண்டும் சுதந்திரக் கட்சிப் பிரமுகர் திரு. தர்மசிறி சேனநாயக்காவைச் சந்திக்கச் சென்றார். அங்கு தலைவரை அதிர்ச்சிக்கும், அவமானத்திற்கும் உள்ளாக்கும் தகவலை தர்மசிறி தெரிவித்தார். எதிர்பாராத விதமாக அநுரா அன்று மாலை இரத்தினபுரியில் நடைபெறும் கூட்டங்களுக்குச் சென்று விட்டதாகவும், நாளை வெள்ளி பகல் 2.00 மணியளவில் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படும் வேளை அநுராவுக்கு வர முடியாமலிருப்பதாகவும், வைபவத்திற்குக் கட்டாயம் அநுராவும் பிரசன்னமாயிருக்க வேண்டுமெனவும், எனவே திட்டமிட்டபடி நாளை உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாதென்றும் குறிப்பிட்டார்.

ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் கைச்சாத்திடல் வைபவத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டதால் கைச்சாத்திடல் வைபவம் ஒத்திவைக்கப்படுவது முஸ்லிம் காங்கிரஸுக்கு பெரிய அவமானத்தையும், தலைகுனிவையும் ஏற்படுத்தும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சொன்னார். எனவே அநுராவுக்கு ஹெலிகொப்டர் வசதி ஏற்படுத்திக் கொடுத்து அவரை ரத்தினபுரியிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவந்து கைச்சாத்திடல் வைபவத்தில் கலந்து கொண்டபின் மீண்டும் ரத்தினபுரிக்கு எடுத்துச் செல்ல - முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்யும் எனவும் தலைவர் அஷ்ரஃப் குறிப்பிட்டார். இந்த யோசனையை தர்மசிறி ஏற்கவில்லை. அநுரா இல்லாமல் கைச்சாத்திடல் வைபவத்தை எப்படியுமே நடத்த முடியாது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் மேலதிக நிபந்தனை :

அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டுமே தேர்தல் உடன்படிக் கையிலும், பொது முன்னணி வேலைத் திட்டத்திலும் கைச்சாத் திட வேண்டும். சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமா தான். அநுரா கட்சித் தலைவர் இல்லை. எனவே அவரில்லாமலேயே கைச் சாத்திடல் வைபவம் நடத்தப்படலாம். சிறிமா மட்டுமிருந்தால் போதும் என்று தலைவர் கூறினர். அநுரா அவசியம் பிரசன்ன மாயிருக்க வேண்டும் என 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யிலும், சுதந்திரக் கட்சி வலியுறுத்தியது. அப்படியானல் தேர் தல் உடன்படிக்கையிலும், பொது முன்னணி வேலைத் திட்டத்தி லும் அநுராவும் கையெழுத்திட வேண்டும் என்ற புதிய நிபந் தனையை தலைவர் வெள்ளி காலை விதித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் இந்தப் புதிய மேலதிக நிபந்தனையை விதிக்கக் காரணம், வியாழன் இரவுக்கும், வெள்ளி காலைக்கு மிடையே ஏற்பட்ட மேற்கூறிய தவிர்க்க முடியாத, சுதந்திரக் கட்சியினரால், முஸ்லிம் காங்கிரஸை அவமானப் படுத்துவதற் கென்றே உருவாக்கப்பட்ட அசாதாரண சூழ்நிலைகளே! இந்த சந்தர்ப்பத்தில் அநுராவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டுமென்று, முஸ்லிம் காங்கிரஸ் மேலதிக நிபந்தனை விதிக்காவிட்டிருந்தால் வெள்ளிக்கிழமை ஜும்ஆவின் பின்னர் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கைச்சாத்திடல் வைப வம் திடீரென ரத்துச் செய்யப்பட்டமையை, முஸ்லிம் காங்கி ரஸ் தனது அங்கத்தவர்களுக்கு நியாயப்படுத்தியிருக்க முடியாது. எனவே தான் முஸ்லிம் காங்கிரஸ் அநுராவையும் கைச்சாத்திட வேண்டுமென மேலதிக நிபந்தனை விதித்தது!

## பொறுமைக்குச் சோதனை :

வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கைச்சாத்திடல் வைப வம், சுதந்திரக் கட்சியின் சதியால் திடீரென ரத்தானதால் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்பட்ட அவமானம், தலைகுனிவு, அசௌகரியங்கள், மனவேதனைகள், அபகீர்த்தி, பண இழப்புகள் சொல்ல முடியாதவை; தாங்கொண்ணுதவை; எழுத்தில் வடிக்க முடியாதவை.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் பொறுமையைக் கடைப் பிடித்தது. ''இன்னல்லாஹ மஅஸ்ஸாபிரீன் - அல்லாஹ் பொறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாளர்களுடன் இருக்கிருன்'' என்ற அல்குர்ஆன் வசனத்திற் கேற்ப முஸ்லிம் காங்கிரஸ் பொறுமையைக் கடைப்பிடித்தது. முஸ்லிம் காங்கிரஸிற்கு இழிவு ஏற்பட்ட இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் சுதந்திரக் கட்சிக்கு வளைந்து கொடுக்கவும், விட்டுக் கொடுக்கவும் முஸ்லிம் காங்கிரஸ் விரும்பியது. உண்மையில் சொல்வதாஞல் என்ருே, அல்லது 25ஆம் திகதி வெள்ளியன்ருே பொது முன்னணியிலிருந்து விலகுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்திருக்க வேண்டும். எனினும் அது பொறுமையைக் கடைப்பிடித்தது.

உடன்படிக்கைகள் இரண்டிலும் கைச்சாத்திடுவதற்கு 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை சுதந்திரக் கட்சிக்குக் காலக்கெடு விதித்தது. இந்தக் காலக்கெடு உண்மையில் சுதந்திரக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் மிடையேயும் (ஏனைய 4 கட்சிகளுக்கும் இடையேயான) பரஸ்பர உடன்பாட்டுடனேயே விதிக்கப்பட்டது. இந்தக் காலக் கெடுவுக்குள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடச் சுதந்திரக் கட்சி இணங்கியது.

## உரிமைக் குரலுக்குப் பெயர் இனவாதமா?

இவ்வாறு இணங்கிய சுதந்திரக் கட்சி, அவ்வாறு தான் இணங்கிக் கொண்டதற்கு மாருக 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தனது மத்திய குழுவை அவசர அவசரமாகக் கூட்டி ''முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைகளுக்கு இடமளிப்பதில்லை'' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதாக 28ஆம் திகதி 'The Island' பத்திரிகையில் தலைப்புச் செய்தி வந்திருந்தது. SLFP SAYS ''NO'' TO SLMC DEMANDS'' இது தான் அந்தச் செய்தியின் தலைப்பு.

இது முஸ்லிம் காங்கிரஸை அதன் முதுகுக்குப் பின்னுல் நின்று குத்திய கீழ்த்தரமானதும், அநாகரீகமானதுமான செயலாகும். சுதந்திரக் கட்சியால் இவ்வாறு தூக்கி வீசி எறியப்பட்ட பின்பு தான் முஸ்லிம் காங்கிரஸ் பொது முன்னணியில் சேர்வதில்லை என்ற திர்க்கமான முடிவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள சகோதர, சகோதரிகளே! இப்போது உங்கள் மனச்சாட்சியில் கைவைத்துச் சொல்லுங்கள். முஸ்லிம்களின் தனித்துவத்தின் சின்னமான முஸ்லிம் காங்கிரஸை பூண்டோடு அழிப்பதற்கு சுதந்திரக் கட்சி சதி செய்ததா? பொது வேலைத் திட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வைக்க வேண்டியிருந்த அவரது கையொப்பத்தை முஸ்லிம்களின் அரசியல் போராட்டத்தின் மின்கம்பக் கொலைத் தீர்ப்பாக மாற்ற முனைந்ததா? உங்கள் தீர்ப்பு எதுவோ அதை ஏற்க முஸ்லிம் காங்கிரஸ் தயாராக உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு முஸ்லிம் வாக்காளப் பெருமக்களே,

பொது முன்னணியில் இணைந்து செயற்படுவதற்கு ஏனைய 5 கட்சிகளை விடவும் முஸ்லிம் காங்கிரஸ் கொடுக்கவிருந்த விலை பெறுமதியற்றது. முன்னணியிலிருந்த ஏனைய கட்சிகளைப் போலல்லாது - 3 கட்ட மாகாணசபைத் தேர்தல்களிலும் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் 29 மாகாண சபை அங்கத்தவர்களைப் பெற்றிருக்கிறது.

பொது முன்னணியின் விஞ்ஞாபனத்தின்படி சிறிமா ஆட்சிக்கு வந்தால் மாகாண சபைகள் கலைத்து விடப்படும். அப்படியானால் முஸ்லிம் காங்கிரஸ் தான் பெற்ற 29 மாகாணசபை உறுப்பினர்களையும் இழக்க வேண்டும். எதிர்வரும் 5 வருடங்களுக்கு மாகாண மட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற அரசியல் அதிகாரத்தை இழக்க வேண்டும். அது மட்டுமல்ல; 29 மாகாண சபை உறுப்பினர்களுக்கும் தலா 6 பேராக அரசினால் நியமிக்கப்பட்ட தேசிய துணைப் படையைச் சேர்ந்த 174 பாதுகாப்பு அலுவலர்களையும் இழக்க வேண்டும். இந்த மாகாணசபை அதிகாரத்தைப் பெறுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது சக்தியைப் பெரிதும் செலவு செய்தது; பல இலட்ச ரூபாய்களைச் செலவு செய்தது. மாகாண மட்டத்திலான இந்த அதிகாரங்களைப் பெற 325,000 முஸ்லிம் வாக்காளர்கள் துணையாயிருந்தார்கள்.

நாட்டு நலனைக் கருத்திற் கொண்டு இவற்றை எல்லாம் இழப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முன்வந்தது. இவற்றுக்குப் பகரமாக முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சியிடம் ஓரிரு நாடாளுமன்றக் கதிரைகளுக்கு மட்டும் தான் உத்தரவாதம் கேட்டது. ஆனால் சுதந்திரக் கட்சிக்கு இதனைத்தர முடியவில்லை. அப்படியானால் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்து முஸ்லிம் மாகாணத்தை முஸ்லிம்களுக்குத் தருமா என்ற சந்தேகம் ஏற்பட்டது நியாயம் தானே? ஏனெனில் அதற்கும் இனவாதச் சாயம் பூசி அலட்சியம் செய்து விடலாம் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரஃப் – பிரேமா சந்திப்பு :

27ம் திகதி முஸ்லிம் காங்கிரஸின் முதுகிலே குத்துவதற்குச் சுதந்திரக் கட்சி சதி செய்கிறது என்பதைத் தனது புலனாய்வுச் சக்தி மூலம் முன் கூட்டியே புரிந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் - பிரதமர் பிரேமதாஸாவால் விடுக்கப்பட்டுத் தனக்காகக் காத்திருந்த அழைப்புக்குச் செவி மடுத்து அன்றிரவே பிரேமதாஸாவைச் சந்திக்க முடிவு செய்தார். தனது பிரத்தியேக வாஸஸ்தலத்தில் சந்திப்போம் என்றார் பிரேமா! இல்லை உங்களின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்திப்போம் என்றார் தலைவர். அதற்கு அவர் உடன் பட்டார். மூடியிருந்த அலுவலகம் இரவோடிரவாகத் திறக்கப்பட்டது. அதனால் தான் பிரேமதாஸாவை முஸ்லிம் காங்கிரஸ் கௌரவமாகச் சந்திக்க முடிந்தது. சுதந்திரக்கட்சி மத்தியகுழு முடிவு பகிரங்கமான பின்னர் தலைவர் இந்த அழைப்பை ஏற்க முயற்சித்திருந்தால் அது முஸ்லிம் காங்கிரஸிற்கு அவமானமாகவே போயிருக்கும். ஒரு பக்கம் உதைத்துத் தள்ளப்பட்டதால் மாற்று வழியின்றி முஸ்லிம் காங்கிரஸ் மறுபக்கம் சென்றிருக்கிறது என்று அக்கறையுள்ள சக்திகள் இட்டுக் கட்டிய கட்டுக்கதை உண்மையென்று நிரூபிக்கப்பட்டிருக்கும்.

ஒரு ஜனாதிபதி வேட்பாளருடன் முஸ்லிம் சமூக உரிமைகளை உத்தரவாதம் செய்து கொண்டு ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுடனும் அவற்றை உத்தரவாதம் செய்யக் கிடைக்கும் பொன்னான சந்தர்ப்பத்தை மண்ணாக்கி விடுவது முஸ்லிம் சமூகத்தின் பக்கம் அரசியல் காற்று வீசும் இந்த அரிய சந்தர்ப்பத்தில், அரசியல் விவேகமற்றது, சாணக்கியமற்றது என்பதை உணர்ந்த தலைவர் அஷ்ரஃப், பிரதமர் பிரேமதாஸாவைச் சந்தித்து முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை எடுத்துக் கூறினார். கடந்த 11 வருடகாலமாக ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் சமூகத்துக்குச் செய்த அநியாயங்களை நேரிலே எடுத்துக் கூறினார். 30 ஆந் திகதி பிரேமதாஸாவுடன் இடம் பெற்ற இரண்டாவது சந்திப்பின் போது முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தார்

8% உள்ள முஸ்லிம் சமூகத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் 12½% வெட்டுப் புள்ளியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அவல நிலையை எடுத்துக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரம்
# நமக்கு
# வரம்



'89ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில்

எமது ஏழு லட்சம் வாக்குகளால்

17 சுதந்திரமான

முஸ்லிம் எம். பி.க்கள்

பாராளுமன்றம் செல்வதை

உறுதிப்படுத்த

## ஒன்றுபடுவோம்!

வெளியீடு: 10-12-88 ஹதியா : ஐந்து ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org